M12/1/A1TAM/SP1/TAM/TZ0/XX

22120507

International Baccalaureate®
Baccalauréat International
Bachillerato Internacional

**TAMIL A1 – STANDARD LEVEL – PAPER 1**
**TAMOUL A1 – NIVEAU MOYEN – ÉPREUVE 1**
**TAMIL A1 – NIVEL MEDIO – PRUEBA 1**

Thursday 10 May 2012 (morning)
Jeudi 10 mai 2012 (matin)
Jueves 10 de mayo de 2012 (mañana)

1 hour 30 minutes / 1 heure 30 minutes / 1 hora 30 minutos

INSTRUCTIONS TO CANDIDATES

- Do not open this examination paper until instructed to do so.
- Write a commentary on one passage only. It is not compulsory for you to respond directly to the guiding questions provided. However, you may use them if you wish.
- The maximum mark for this examination paper is *[25 marks]*.

INSTRUCTIONS DESTINÉES AUX CANDIDATS

- N'ouvrez pas cette épreuve avant d'y être autorisé(e).
- Rédigez un commentaire sur un seul des passages. Le commentaire ne doit pas nécessairement répondre aux questions d'orientation fournies. Vous pouvez toutefois les utiliser si vous le désirez.
- Le nombre maximum de points pour cette épreuve d'examen est *[25 points]*.

INSTRUCCIONES PARA LOS ALUMNOS

- No abra esta prueba hasta que se lo autoricen.
- Escriba un comentario sobre un solo fragmento. No es obligatorio responder directamente a las preguntas que se ofrecen a modo de guía. Sin embargo, puede usarlas si lo desea.
- La puntuación máxima para esta prueba de examen es *[25 puntos]*.

2212-0507


© International Baccalaureate Organization 2012

ஏதாவது ஒரு கேள்விக்கு பதில் விளக்கி எழுதவும்.

**1.**

ரவி வெளியே வந்தான்... "வாட் ஈஸ் திஸ்?... " நர்ஸ் அவரிடம் விரைவாக வந்து சொன்னாள். "ஷி ஹாஸ் பிகம் இன்ஸேன்." ரவி கேட்டான்: இவங்களுக்கு வேண்டியவங்க யாரானும் இருக்காங்களா?... ஓ! நீங்கதானா? கைண்ட்லி டேக் ஹர் ஹோம்... மிஸ் தாமஸ்... கிவ் ஹர் ஸம் ஸெடேட்டிவ் இன்ஜெக்ஷன்... நாங்க இதுக்கு ட்ரீட் பண்ண முடியாது. நோ பெஸிலிட்டீஸ்..."

இன்ஸ்பெக்டர் முதலாளியிடம் சொன்னார். "டாக்டர் ரிப்போர்ட்டைக் கொடுத்திட்டாரு... உங்க ட்ரைவர், கண்டெக்டர் ரெண்டு பேரோட ஸ்டேட்மெண்ட் வேணும்... சம்பவத்தை பார்த்தவரு அந்த அய்யரு... அவரோட ஸ்டேட்மெண்டும் வேணும். எல்லோரும் ஸ்டேஷனுக்குப் போவோம்... வாங்க... "

அம்பியின் அத்திம்பேரோடு பேசிக் கொண்டிருந்த பாலு அய்யர் சிரித்துக் கொண்டே சொன்னார்: " சரி நானும் வரேன், இவரையும் வேணும்னா கூட்டிண்டு வரேன். "

வேலு அவரை உற்று நோக்கினான். பாலு அய்யர் அவரையும் சரிக்கட்டி விட்டாரென்று அவனுக்குப் புரிந்தது. அவர் முதலாளியருகே வந்து நின்றார்.

"அந்த அம்மாவை யார் கூட்டிக்கிட்டுப் போவாங்க?" என்று கேட்டான் முதலாளி.

நர்ஸ் கொடுத்த இன்ஜெக்ஷனின் காரணமாக அம்பியின் அம்மா மயக்கமுற்றிருந்தாள்.

"ஜானகி, நீ அம்மாவை ..." என்று ஆரம்பித்த அம்பியின் அத்திம்பேர் முதலாளியைக் கேட்டார். "அவ எப்படி அழைச்சிண்டு போக முடியும்? கார் இருக்குதா உங்ககிட்டே?"

இன்ஸ்பெக்டர் சொன்னார்: "நாம் போலீஸ் ஜீப்லே போவோம். இவரோட கார்லே உங்க வொய்ஃபும், அவங்க அம்மாவும் போகட்டும், ட்ரைவர் அவங்களைக் கொண்டு போய் விட்டுட்டு ஸ்டேஷனுக்கு வரட்டும்...."

"வேலு ஐயா சொல்றபடி செய்" என்றான் முதலாளி.

எல்லாரும் வெளியே வந்தார்கள். இன்ஸ்பெக்டர் முதலாளியிடம் சொன்னார்: "டாக்டர் ரிப்போர்ட்தான் சாதகமா இல்லை,"

"நான் யாரு, என்ன செய்ய முடியும்னு சொன்னீங்களா அந்த மடையன்கிட்டே?"

"சொன்னேன், அவன் கேக்க மாட்டேங்கிறான்... கத்துக்குட்டி ராஸ்கல்..."

ரவி அப்பொழுது வெளியே வந்தான். "எல்லோரும் இப்படிப் போயிட்டீங்கன்னா யாரு இங்கே இருப்பாங்க, பையனைப் பாத்துக்க!"

"கொஞ்ச நேரம் கழிச்சு என் வொய்ஃப் இங்கே வருவா... " என்றார் அம்பியின் அத்திம்பேர்.

“என்னய்யா டாக்டரே, ரிபோர்ட் இப்படிக் கொடுத்திருக்கீங்க?” என்று கேட்டான் முதலாளி.

“உங்க இஷ்டப்படி ரிபோர்ட் கொடுக்கனும்னா நான் எதுக்காக டாக்டரா இருக்கணும்?”

“நான் டி.எம்.ஓ.வை ப் பார்த்துப் பேசிக்கிறேன்... உங்க அதிஷ்டம், தண்ணி இலாலாத காட்டுக்குப் போகணும்னா போங்க...”

“நீங்க யாருன்னு நினைச்சிண்டிருக்கீங்க, இப்படிப் பேச?” என்று சீறினான் ரவி.

“நான் நினைச்சிக்கிட்டிருக்கேன், சுரக்காய்க்கு உப்பு இல்லேன்னு... போய்யா தெரியும்... நானும் யாருன்னு உனக்குத் தெரியாமலேயா இருக்கப் போவுது...?”

“கேவலம் – இந்த வேலைக்காக, நீ விட்டெறியப் போற காசுக்கு இந்த கும்பல் மாதிரி, காக்கா கணக்கா காத்திண்டிருக்கப் போறேன்னு நீ நினைச்சியா... ? யு கான் ஜாலி வெல் கோ டு தி சீஃப் மினிஸ்டர்; ஃபார் ஆல் ஐ நோ... நான் என் ரிப்போர்ட்டை மாத்தப்போறதில்லை... எவ்வளவு தைரியம் இருந்தா ஆஸ்பத்திரி வாசல்லியே நீ இப்படிப் பேசுவே, உனக்காக இந்த இன்ஸ்பெக்டர் பேரம் பேச வரான்... கோர்ட்லே கேஸ் வந்து ஜெயிச்சா, பத்தாயிரக் கணக்கிலே அழணுமேன்னு, சாமார்த்தியமா சமாளிக்கப் பார்க்கறீங்களா?”

இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார்: “ டாக்டர்... கொஞ்சம் மரியாதையா பேசுங்க....”

“என்னடா மரியாதை வேண்டிக் கிடக்குது உங்களுக்கு? ஒரு உசிரு உள்ளே மன்றாடிக் கிட்டு இருக்குது... எப்பொடாப்பா பஸ்ஸை ஏத்தப் போறேன்னு காத்து கிட்டிருந்தாப்பலே,எல்லாரும் பொணத்தைக் கொத்தித் தின்ன வந்துட்டீங்களே, படுபாவிகளா? இதோ பாருய்யா முதலாளி ... உன் பிச்சைக் காசு எனக்கு வேண்டாம்... நான் உண்மையைச் சொல்றேன்...பஸ்ஸை ஏத்தினது நான்தான்... கோர்ட்லே கேஸ் வரட்டும்... நாட்டை நாற அடிச்சிட்டு இருக்கிற கும்பல் யார் யாருன்னு எல்லாருக்கும் தெரிய வேணாம்? டாக்டரய்யா, வாங்க, பையனைக் கவனிச்சுக்க நான் இருக்கேன்....” என்று கூறிக்கொண்டே உள்ளே சென்றான் வேலு.

நாசகாரக் கும்பல் – இந்திரா பார்த்தசாரதி

– ஆசிரியர் எவ்வாறு பல விதமான கதாபாத்திரங்களை இக் கதையில் அமைத்துள்ளார்.

– சமூகத்தில் ஏழைகள் பணக்காரர்களால் நசுக்கப்படுகிறார்கள். இக்கருத்தை ஆசிரியர் எவ்வாறு எளிய நடையில் எடுத்துக் காட்டுகிறார்?

– மக்கள் அனைவரும் அறிந்து கொள்வதற்கு ஆசிரியர் கைப் பற்றிய முறைகளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் என்று எழுதவும்.

**2.**

## புத்தரும் ஏழைச் சிறுவனும்

### புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்த ஐயன் – மெல்ல
நிமிர்ந்து தலை தூக்கிச்
“கலத்தினி லேகொஞ்சம் – பாலைக்
கறந்து தருவாய்” என்றான்.

### சிறுவன் மறுத்தல்

“ஐயையோ ஆகாது” என்றான் – சிறுவன்
“அண்ணலே! யானும் உனைக்
கையினால் தீண்டவொண்ணா – இடையன்ஓர்
காட்டு மனிதன்” என்றான்.

### புத்தர் அறிவுறுத்தல்

உலகம் புகழ் பெரியோன் – இந்த
உரையினைக் கேட்டு அந்நாள்
அலகில் கருணையினால் சொன்ன
அமுத மொழி இதுவாம்:
“இடர் வரும்போதும் – உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் – மாந்தர்
உறவு கொள்வர். அப்பா!
ஓடும் உதிரத்தில் – வடிந்து
ஒழுகும் கண்ணீரில்,
தேடிப் பார்த்தாலும் – சாதி
தெரிவதுண்டோ அப்பா?
எவர் உடம்பினிலும் – சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர் விழி நீர்க்கும் – உவர்ப்பே
இயற்கை குணமப்பா!

நெற்றியில் நீறும் – மார்பில்
நீண்ட பூணூலும்
பெற்று இவ் உலகுதனில் – எவரும்
பிறந்த துண்டோ அப்பா!
பிறப்பினால் எவர்க்கும் – உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் – நல்ல
செய்கை வேண்டும், அப்பா!
நன்மை செய்பவரே – உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மைசெய்பவரே – அண்டித்
தீண்ட ஒண்ணாதார்."

**சிறுவன் பால் தருதல்**

நிலத்துயர் ஞானி – இவை
நிகழ்த்தி, "என் தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம் – பாலைக்
கறந்து தா" என்றான்.
ஆயர் சிறுவனும் – கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயினும் இனியன் – கொண்ட
தளர்ச்சி நீங்கினனே.

ஆசியஜோதி - தேசிக விநாயகம் பிள்ளை

– இந்தப் பாட்டின் மூலம் ஆசிரியர் என்ன செய்திகளை மக்களுக்குத் தெரிவிக்கிறார்?

– இந்தப் பாட்டின் மொழி நடை, சொல் நயம் எப்படி இருக்கிறது என்பதை விவரமாக எழுதவும்.

– இதைப் படித்த பிறகு உன் கருத்துகளை எழுதவும்.